**செய்தி வெளியீடு எண்:125** **நாள்:26.02.2013**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை இன்று (26.2.2013) தலைமைச் செயலகத்தில், காவேரி நதிநீர் வழக்கு தொடர்பாக தமிழகத்தின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வாதாடிய வழக்கறிஞர்களும், காவேரி தொழில் நுட்பக் குழுவினரும் சந்தித்தனர்.

காவேரி நதிநீர்ப் பிரச்சனை தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் வழக்கில் தங்களுக்கு தகுந்த ஆலோசனைகளையும், வழிகாட்டுதல்களையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அவ்வப்போது வழங்கியதன் காரணமாக தங்களால் சிறப்பாக வாதிட முடிந்தது என்றும், அதன் காரணமாக உச்ச நீதிமன்றம் காவேரி நடுவர்மன்ற இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிட்டது என்றும் தெரிவித்து, தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை தமிழகத்தின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வாதாடிய வழக்கறிஞர்களும், காவேரி தொழில்நுட்பக் குழுவினரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு தெரிவித்து கொண்டனர். அப்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், காவேரி நடுவர்மன்ற இறுதி ஆணை மத்திய அரசிதழில் வெளியிடுவதற்கு தமிழகத்தின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் திறம்பட வாதாடிய வழக்கறிஞர்களுக்கும், காவேரி தொழில் நுட்பக் குழுவினருக்கும் தனது பாராட்டுதல்களை தெரிவித்தார்கள்.

இந்தச் சந்திப்பின்போது, காவேரி நடுவர்மன்ற இறுதி ஆணையினை செயல்படுத்த தமிழகத்தின் சார்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இச்சந்திப்பின்போது, மாண்புமிகு நிதியமைச்சர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், பொதுப்பணித் துறைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 26.2.2013